**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 07 of 2022** |
| Deposition of witness | : | **PW 1** |
| Name | : | **பழனிச்சாமி** |
| Father Name | : | **ராமசாமி கவுண்டர்** |
| Age | : | **75** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.09.2025.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது தந்தை வழி தாத்தாவின் பெயர் அனுமந்த கவுண்டர். அனுமந்த கவுண்டருக்கு மூன்று மகன்கள். எனது தந்தை ராமசாமி கவுண்டர். பெரியசாமி கவுண்டர், பொன்னுசாமி கவுண்டர். அவருக்கு ஒரு பெண்ணும் உள்ளார் ஆனால் எனக்கு பெயர் தெரியவில்லை. மேற்படி பொன்னுச்சாமி கவுண்டர் இந்த தாவா தாக்கல் செய்த சமயத்தில் உயிருடன் இருந்து பின்னர் இறந்து விட்டார். பொன்னுச்சாமி கவுண்டருக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன் பெயர் சுப்பிரமணி. மேற்படி பொன்னுச்சாமியின் மனைவி இறந்துவிட்டார். மேற்படி பொன்னுச்சாமியின் மகன் சுப்பிரமணி (இரண்டாம் பிரதிவாதி) இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10.50 ஏக்கர்.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2025.09.11 18:23:02 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.